தனிப்பிரதி – ரூ. 20/-

ஆண்டு சந்தா– ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

மே– ஜூன் 2022

மலர் 1 இதழ் 4


இனிக்கும் இலக்கிய இதழ்

## அற நெருப்பில் எரியும்

## இலங்கை!

## அலறிய ராஜபக்சேக்கள்!

## வரலாற்றைத் திருப்பிப்போட்ட காலம்!



அறிவுவானை அளந்த செம்பறவை

## கோவை ஞானி!

# புயலும் பணியும்



ஆணும் பெண்ணும்
நிகரெனக் கொண்டால்
வையகம் தழைக்கும்
அறிவில் சிறக்கும்

அவளின் கனவுகள்
அடுப்பில் எரிந்து
கேலியாய் மாறிட
பாவமென்ன செய்தாளோ?

நிலமும் நீரும்
பெண்ணெனச் சொல்லிப்
பெண்மை வன்மம்
செய்வதும் தகுமோ?

இவள் பெண்தானே
என்று நினைத்தாயா?

புரட்சியும் எழுச்சியும்
பெருகி வந்தால்
பனியும் புயலும்
பணியுமே அவளை

வார்த்தையில் பெண்ணியம்
பேசிடும் வர்க்கமே
பெண்ணென்று நினைத்துப்
பூவாக மிதிக்காதே

ஆண்மைக் கர்வம்
அதிகம் ஆனால்
மென்மை மலரிவள்
இருளை உடைத்துத்
தடைகள் நீக்கும்
காலம் வருமே

-முனைவர் தாழை **இரா.உதயநேசன்**

# முத்தமிழ் நேசன்

இனிக்கும் இலக்கிய இதழ்

மே - ஜூன் 2022 மலர் 1 இதழ் 4

நிறுவனர்

தாழை இரா.உதயநேசன்

ஆசிரியர்

த.அமுதா

ஆசிரியர் குழு

முனைவர்.ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

வடிவமைப்பு

ம.சேவியர்

அச்சு

M.S ஆப்செட் ராயப்பேட்டை



அலுவலக முகவரி

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் – 635 802

திருப்பத்தூர் மாவட்டம்


## தலையங்கம்

### தீர்வுகளும் திருத்தங்களும்

அண்மைக் காலமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருகிவருவது கவலையைத் தருகிறது.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே– நல்ல

மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்றார் கவிமணி தேசிகவிநாநயகம். ஆனால் பெண்ணாகப் பிறப்பதே கொடுமையானதோ என்று நினைக்கும் படியான நிலவரமே இன்றும் நிலவுகிறது.

படிக்கும் கல்வி நிறுவனங்கள் தொடங்கி, பணியாற்றும் அலுவலகங்கங்கள் வரை, பெண்களுக்கு எதிரான க்ரைம்கள் தொடர்ந்து அரங்கேற்றப்படுகின்றன.

இவற்றுக்கிடையே குடும்ப வன்முறைகள் ஒரு பக்கம் பெண்களுக்கு எதிரான வதை படலத்தை நடத்திக்கொண்டிருக்க– இன்னொரு பக்கம் காதலின் பெயரால் ஏமாற்றப்படும் அவலங்களும், காதலிக்க மறுத்துப் பின் வாங்கும் இளம்பெண்களுக்கு அரிவாள் வெட்டு, ஆசிட் வீச்சு என்கிற வகையிலான விபரீதங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பாதிக்கப்படும் பெண்கள் தங்களுக்கான நீதியையும் பாதுகாப்பையும் பெறுவது எப்படி?

இந்த ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், பாலியல் குறித்த புரிதலையும், தற்காப்புக் கலைகளையும் பெண் பிள்ளைகளுக்கு கல்வி நிலையங்களிலேயே வழங்கப்படவேண்டும். இதுதான் இப்போதைக்கு இருக்கிற ஒரே தீர்வு.

த.அமுதா

– ஆசிரியர்

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,

யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mutamilnesan2022@gmail.com



# அனுபவமே ஆயுள் ரேகை !

வயதாகிப் போனாலும் இளமை உண்டாம்
வாலிபமே உள்ளத்தில் கொள்ளை கொள்ளும் .
அயர்வாகிப் போனாலும் கவலை இல்லை .
அழகான நரையினிலும் முதுமை இல்லை .

இயற்கையதும் இதுவன்றோ ஏற்போம் நாமே !
இன்முகத்தால் புன்னைகைப்போம் ஏற்பீர் நீரே !
மயக்கங்கள் வந்திடலாம் மாற்றம் இன்றி
மங்காத சுருக்கங்கள் அழகே ஆகும் !

காலங்கள் கரைந்திடலாம் நாட்கள் போகும்
கரியமுடி நரைத்திடலாம் வாழ்க்கை தன்னில்
பாலங்கள் அமைத்திடுவோம் பண்பாய் நின்று
பகுத்தறிவால் பட்டறிவால் உலகை வெல்வோம் .

சீலங்கள் நமைப்பற்ற சிறப்பே ஆகும் .
சிந்தனையும் சீர்பெறவே முதிர்ச்சி தன்னில் .
காலத்தால் வந்திட்ட மூப்பும் கூடக்
கவலையின்றி ஏற்கின்ற மனத்தைக் கொள்வோம் !

இன்பமுடன் வாழ்த்திட்ட காலம் சொல்லும்
ஈடிலாத பேரனையும் பெயர்த்தி சேர
நன்மைகளைப் பலவாறு நமக்கே சொல்லும்
நன்னெறியைப் புகட்டியதால் நாடே வெல்லும் .

இன்னலின்றி நெறிமுறையால் வாழும் வாழ்க்கை
இச்சகத்தில் மாபெரிய வாழ்வே ஆகும் .
அன்புடைய நெஞ்சத்தால் வாழ்த்தும் போக்கால்
ஆண்டிடுமே அனுபவமே ஆயுள் ரேகை !!!



*முனைவர் பாவலர் சரஸ்வதி பாஸ்கரன்*
திருச்சிராப்பள்ளி.

# தாய்மையன்பு!



பெண்ணின் சிறப்பை பெரிதும் அறிந்திடுவோம்!
பெருமை கூட்டும் தாய்மை குணமெனவே!
மண்ணின் மாண்பு மலரும் நிலையாக!
மனத்தில் கருணை சுரப்பாள் பெண்தானே!

எண்ணம் முழுதும் ஏற்றம் கொண்டவளாம்!
எடுக்கும் முடிவில் உறுதி காட்டிடுவாள்!
கண்ணாய்ப் போற்ற வேண்டும் பெண்ணினத்தை!
காலம் தோறும் நின்றே வென்றிடுவாள்!

அயரா உழைப்பின் நிலையே பெண்ணன்றோ!
அன்பு பாசம் மனத்தில் நிறைத்திடுவாள்!
இயலா தென்றே எதுவும் இல்லையென
எண்ணும் படியாய் எங்கும் சாதிப்பாள்!

உயர்வாய்ப் போற்ற நிமிர்ந்தே வலம்வருவாள்!
உணர்வில் தாய்மை உயிர்ப்பை மெய்ப்பிப்பாள்!
செயலில் காட்டும் செம்மை குணமுடையாள்!
சீராய்க் காத்து மகிழ்வாய் மானுடமே!

துறைகள் தோறும் பெண்ணைக் காண்கையிலே
... துள்ளும் மனமும் மகிழ்வாய்ப் பெருமிதத்தில்!
குறைகள் கூறிக் கூண்டில் ஒடுக்காமல்
... கொடுப்போம் சமமாய் உரிமை கேட்காமல்!
சிறையில் இட்ட கொடுமை தனைத்தாண்டிச்
... சிறகை விரித்துப் பறக்கக் கண்டோமே!
நிறைவாய்ப் பெண்ணின் வளர்ச்சி உயரட்டும்!
... நேயம் மனிதம் உலகில் மலரட்டும்



-முனைவர் ஓசூர் மணிமேகலை
கைப்பேசி: 9677520336



## அற நெருப்பில் எரியும் இலங்கை!
## அலறும் ராஜபக்சேக்கள்!
## வரலாற்றைத் திருப்பிப்போட்ட காலம்!

**- நாடோடி**

2009 மே மாதத்திற்குப் பின் மிகச்சரியாக 13 வருடங்கள் கழித்து, உலகிற்குப் பாடம் நடத்த இலங்கைக்கு வந்திருக்கிறது...2022 மே.

திடீரென அங்கே மக்கள் புரட்சி எழுந்திருக்கிறது.

உலகையே தங்கள் காலடியில் உருட்டி விளையாடலாம் என்று மமதை கொண்டிருந்த ராஜபக்சே சகோதரர்களுக்கு எதிராக அங்கே புரட்சித் தீ மூண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளை ஒழிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஈழத் தமிழர்களுக்கு எதிராக கொடுங்கோலர்களான ராஜபக்சே சகோதரர்கள் ஏந்திய கொலைவாள், இன்று அவர்கள் பக்கமே திரும்பி இருக்கிறது. அவர்களது ஆட்களாலேயே இந்த வதைப்படலம் ஆரம்பித்திருக்கிறது.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பார்கள். இந்த அறக்குரல் இப்போது அங்கே சில வித்தைகளை ஏற்படுத்தி வருகிறது.

அதுதான் மக்கள் புரட்சி.

'வேந்தருக்குத் தலையறுத்தல் பொழுது போக்கு


நமக்கெல்லாம் உயிரின் வாதை' என்பது புரட்சிக்கவிஞர் பராதிதாசனின் அப்பட்டமான வரிகள்.

ஆம். இனவெறி கொண்டு தமிழ் மக்களை வதைப்பதையும், அவர்களைக்

கொன்றழிப்பதையும் பொழுது போக்காக வைத்திருந்த சர்வாதிகாரி மகிந்த ராஜபக்சே, இப்போது அவரது சிங்கள மக்களாலேயே துரத்தப்பட்டு உயிருக்குப் பயந்து, தனது சொகுசான அலரி மாளிகையில் இருந்து தன் குடும்பத்தோடு ஓட்டம் பிடித்திருக்கிறார்.

அவரது சகோதரன் கோத்தபய ராஜபக்சேவோ, முடிந்தவரை தனது





அதிகாரத்தை வைத்து, மக்களின் கோபத்தில் இருந்து தப்பிக்கலாம் என்று, மக்களைச் சந்திக்காமல், பாதுகாப்பு வளையத்திற்குள் இருந்துகொண்டு வேதம் ஓதிக்கொண்டு இருக்கிறார்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்கிற இளங்கோவடிகளின் சிலப்பதிகார போதனை, அங்கே இப்போது கோலோச்சிக்கொண்டு இருக்கிறது.

நாட்டின் பதவி அதிகாரத்தை விட வெகுமக்களின் சக்தி எப்படிப்பட்டது என்பதை இலங்கையில் நடக்கும் மக்கள் புரட்சி அழுத்தமாக உணர்த்தி வருகிறது.

13 ஆண்டுகளுக்கு முன்பு, இதே மே மாதத்தில், இலங்கையில் ராஜபக்சேவால் எப்படி எல்லாம் கொடூரக் காட்சிகள் அரங்கேற்றப்பட்டதோ, அதே காட்சிகள் ராஜபக்சேவுக்கு எதிராக அங்கே அரங்கேறிவருகின்றன.

திரும்பிய பக்கமெல்லாம் பற்றி எரிகிறது. ராஜபக்சேவின் இல்லம் தொடங்கி, அவருக்கு ஜால்ரா போட்டுவந்த மந்திரி பிரதானிகள், அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரின் வீடுகளும் சிங்கள மக்களாலேயே தீவைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறது.

2009 மே மாதம் தமிழர்கள் பகுதியில் நடந்த அத்தனையும் ராஜபக்சேவுக்கு எதிராக நடக்கிறது. அன்று ஈழத் தமிழர்களை மரண ஓலம் எழுப்ப வைத்த ராஜபக்சே சகோதரர்கள், இப்போது தங்களுக்கு என்ன ஆகுமோ என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் ராஜபக்சே மக்களுக்கு பயந்து ஒளிந்துகொண்டு இருக்கிறார்.

சிங்கள வெறியரான மகிந்த ராஜபக்சேவை சிங்களர்களே கொலை வெறியோடு துரத்துகிறார்கள். அதிகார மமதையில், தமிழர்களை அழித்தொழித்த அந்தக் கொடுங்கோலன் மக்களின் ரௌத்திரத்திற்கு முன், தனது அதிகாரமும் பதவியும் பயன்படாது என்பதைப் புரிந்துகொண்டு, தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தப்பியோடி இருக்கிறார்.

மக்களுக்கு பயந்து தப்பி ஓடிய மகிந்தர், சாலை வழியாகச் சென்றால் மக்கள் கொன்றுவிடுவார்கள் என்று ஹெலிக்காப்டர் மூலம் தப்பி, தமிழர்களின் பகுதியான திருகோணமலை கடற்படை முகாமில் தனது குடும்பத்தினரோடு ஒளிந்துகொண்டார்.

அவர் மீதான கோபத்தில், அவர் கட்சியைச் சேர்ந்த எம்.பி. அமரகீர்த்தி, மக்களால் அடித்தே கொல்லப்பட்டிருக்கிறார். தமிழர்களுக்கு எமனாக இருந்த அந்த மகிந்தருக்கு சிங்களர்களே மரண பயத்தைக் காட்டிவிட்டார்கள்.

அன்று–

தமிழர்களின் நினைவிடங்களையும், போர் நினைவுச் சின்னங்களையும் பிரபாகரனின் வீட்டையும் இடித்துத் தரைமட்டமாக்கினார் அகம்பாவம் பிடித்த ராஜபக்சே. இன்றோ, அவரது அப்பா டான் ஆல்வின் ராஜபக்சேவின் சிலையும், நினைவிடமும், குடும்பக் கல்லறையும் தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது.



அன்று தமிழர்களின் ரத்தக்கறையால் சிவந்த இலங்கை, இப்போது, சிங்களர்களின் ரத்தத்தால் சிவந்து கொண்டிருக்கிறது. அதிலும் ராஜபக்சே அடிப்பொடிகளின் ரத்தத்தால் சிவந்திருக்கிறது. கொடுங்கோலர் ராஜபக்சேவின் இனவெறி சாம்ராஜ்யம் மிக விரைவில் சரிந்துவிட்டது.

தமிழர்களுக்கு எதிரான மன நிலையோடு 2005-ல் அந்நாட்டு அதிபராக அதிகாரத்திற்கு வந்த ராஜபக்சே, அப்போதிருந்தே தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தார். விடுதலைப்புலிகளுடன் அடிக்கடி யுத்தத்தை நடத்தினார். விடுதலைப் புலிகளைத் தேடுகிற சாக்கில், தமிழர்களை வதைத்தது அவரது ராணுவம். தமிழ்ப் பெண்களிடம் வக்கிரத்தைக் காட்டினர். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று புதைத்தனர்.

2009-ல் விடுதலைப்புலிகள் மீது பிரயோகிக்கப்பட்ட இறுதி யுத்தத்தின் போது, உலக நாடுகளின் வேண்டுகோளையும் எச்சரிக்கையையும் மீறி, 2009 மே 12 முதலே ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களையும் அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கினார் ராஜபக்சே. புலிகளையும் புலிகள் என்ற பெயரில் அங்குள்ள அப்பாவித் தமிழர்களையும் ஒழித்து விட்டால் ஒட்டு மொத்த இலங்கையும் சிங்களர் நாடாகிவிடும் என்பது அவரது எண்ணம். சமாதானப் பேச்சுவார்த்தையின் போது, பல நாடுகளின் கோரிக்கையை ஏற்று விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டார்கள். ஆனால் கொடுங்கோலன் மகிந்த ராகபக்சேவோ,

சர்வதேசப் போர் நெறிமுறைகளுக்கு மாறாக, ஆயுதமின்றி நிராயுதபாணியாக இருந்த விடுதலைப் புலிகள் மீதும், அவர்கள் சாக்கில் அப்பாவித் தமிழர்கள் மீதும் கொடும் தாக்குதலை நடத்தச் செய்தார் ராஜபக்சே. அந்தப் போர் இனி அழிப்பு யுத்தமாக ஆனது.

லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். புலிகளின் முக்கியத் தலைவர்களை நெருங்க முடியாத ராஜபக்சே ராணுவம், கிளஸ்டர் குண்டுகளையும், ரசாயனக் குண்டுகளையும் வீசி தமிழர்களைக் கொத்துக் கொத்தாய் கொன்று குவித்தது. நந்திக்கடல் பகுதியும் முள்ளிவாய்க்காலும் பிணக்காடானது. அந்த இறுதி யுத்தத்தின் போது, பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் சரணடைந்த நிலையில், அவருக்கு பிஸ்கட் கொடுத்து திங்கச் சொல்லிவிட்டு, அதைச் சாப்பிடும் போதே, துடிக்கத் துடிக்க அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். இதைப்பார்த்து உலகமே கண்ணீர் வடித்தது. இதேபோல் போர் தொடுக்கப்படாத பகுதி என்று, அறிவிக்கப்பட்ட பகுதிக்குள், அப்பாவி மக்களைப் போகவைத்து, உயிர் தப்பிக்கும் ஆசையோடு குழந்தை குட்டிகளுடன் அப்படிச் சென்றவர்களையும் குண்டுகளை வீசிக் கொன்று குவித்தனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களையும் அந்த மாபாவிகள் விட்டுவைக்கவில்லை.

இப்படிப்பட்ட வெறியாட்டம் ஆடி, லட்சக்கணக்கான தமிழர்களை அழித்தொழித்த கொடுங்கோலன் ராஜபக்சேதான், தமிழர்கள் தண்டிக்காத நிலையில், இன்று சிங்களர்களிடமே உயிர்ப்பிச்சை கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

இலங்கை அதிபராக இருக்கும் மகிந்தரின் சகோதரர் கோத்தபய ராஜபக்சே, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தந்திர நாடகம் ஆடிக்கொண்டு இருக்கிறார். நாட்டை சீர்குலைத்தது மகிந்தர் மட்டும்தான் என்றும், தான் யோக்கிய சிகாமணி என்றும் காட்டிக்கொண்டு இருக்கிறார்.

அவசர அவசரமாக இலங்கை ஐக்கிய தேசியகட்சித் தலைவரான ரணில் விக்ரமசிங்கேவைப் பிரதமராக ஆக்கி இருக்கிறார். இவர் தேர்தல் களத்தில் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர். இவரையும் சிங்கள மக்களும் அங்குள்ள அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதனால் அங்கே அடுத்து என்ன நடக்கும் என்று யூகிக்க முடியாத நிலை நிலவுகிறது.

எது எப்படியோ, லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து சர்வதேச குற்றவாளியாக உலவிய, மகிந்த ராக்பக்சேவுக்கு, காலம் உரிய தண்டனையைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. தகுந்த பாடத்தையும் அது நடத்தத் தொடங்கி இருக்கிறது.

சர்வதேச விசாரணைகளில் இருந்தும், தன் மீதான போர்க்குற்றங்களில் இருந்தும் தப்பித்துவிட்டதாக நினைத்த ராஜபக்சே, காலத்தின் இரும்புக் கரங்களிடம் பிடிபட்டிருக்கிறார்.

அநீதியாளர்களை யார் மன்னித்தாலும் அவர்களை அறம் தண்டித்தே தீரும்.

# கவிதை வீதி



## பூவிழிப் பாவையே



பூவிழிப் பாவையே!
பூந்தளிர் மேனியே!
பூலோகம் எங்கெங்கும்
பூவையின் நினைவிலே!

பொன்னிறப் பாதமே
போதுமே தாகமே!
போகவே வேண்டுமே
பூக்களின் பாதையே!

பார்த்திடும் கண்களில்
போர்த்துதே காதலே!
ஈர்த்திடும் அழகினில்
இதயமும் அதிருதே!

உனக்காகவே கண்மணி
உயிரை ஏந்தினேன்!
உண்மையாய் உள்ளத்தில்
உன்னைத் தாங்கினேன்!

கணங்களும் மழையாகிக்
கவிதை பாடுதடி!
காத்திருப்பும் சுகமாய்க்
கானம் இசைக்குதடி!

கண்ணாமூச்சி ஆட்டம்
ஆடவா மானே!
கண்களில் வைத்துக்
கொள்ளவா மீனே?

– டாக்டர் **ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர், இலங்கை.**

# பொம்மையின் பயணம்



கடையில்தானிருந்தது
அந்த பொம்மை
அப்பா அவ்வளவு சொல்லியும்
அந்த பொம்மையேதான் வேண்டுமென
அடம்பிடித்தது குழந்தை.

கேட்ட பொம்மையே கிடைத்ததில்
குழந்தைக்கு அவ்வளவு மகிழ்ச்சி
ஒரு பொம்மை விற்றதில்
கடைக்காரருக்கு மகிழ்ச்சி

வாங்கிய பொம்மையைப்
பிரியவேயில்லை குழந்தை
சாப்பிடும்போதும் தூங்கும்போதும்
விளையாடும்போதும்
குழந்தையோடேயிருந்தது பொம்மை

பத்து நாட்கள்தான்
இன்னொரு
விளையாட்டுப் பொருளை
வாங்கியதும்
பொம்மை வீட்டின்
ஒரு மூலையில் வசிக்க ஆரம்பித்தது

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு
பரணுக்கு இடம்மாற்றப்பட்டது
பிறகு வீட்டிலிருந்து
வெளியேற்றப்பட்ட பொம்மை
மூலையில் வைக்கப்பட்டிருந்த
பழைய பொருட்களோடு கிடந்தது.

வீட்டைச் சுத்தம் செய்து
பழைய குப்பைகளைக்
கொண்டுபோய்க் கொட்டுகையில்
பொம்மையும் வெளியேறியது

பள்ளத்தின் ஓரத்திலுள்ள
குப்பைக் குழியில் கொஞ்சநாள் கிடந்தது
மழைக்காலம் வந்ததும்
பள்ளத்தில் வந்த தண்ணீரில்
பயணித்துப் போன பொம்மை
ஊரோரக் குளத்தில் கொஞ்சநாள்
மிதந்து கொண்டிருந்தது
தண்ணீர் வற்றியதும்
குளத்தடி மண்ணில்
கொஞ்சநாள் கிடந்தது
குளத்தில் மண் அள்ளுகையில்
மண்ணோடு சேர்ந்து
லாரியேறிப் போனது பொம்மை

இப்போது அந்த பொம்மை
எங்கேயிருக்கிறதென்று
யாருக்கும் தெரியாது
எங்கேயெனத் தெரியாமல்
எங்கேயோயிருக்கும்

பொம்மையின் ஞாபகத்தில்
குழந்தை இருக்கிறது
குழந்தைமையைத் தொலைத்து
வளர்ந்துவிட்டவனி (ளி)ன்
ஞாபகத்தில் பொம்மை இல்லை

**– சௌவி**




# பார்த்தேன்...! சகித்தேன்...!

பேருந்தில் நெடுந்தூரப் பயணத்தின் இடையே
பெரியதொரு உணவுக் கடையின் அருகே
நிறுத்திய போது கண்டேனொரு காட்சி!
நினைவிலிருந்து என்றும் நீங்காதக் காட்சி!

அக்கடையின் வாயிலின் ஓர் புறமாய்
அங்கொருவன் பேடியாய் நடுங்கியே  நின்றான்!
அவனையே கோபத்தில் எரித்து விடுவதாய்
பெருந்தடி கொண்டவன் அடிக்கச் சென்றான்!

தடுத்திட முயன்றவனோ தள்ளாடித் தள்ளாடி
தன்னைக் காத்திடவே முயற்சி செய்தான்!
பேருந்தில் இறங்காது அமர்ந்தவள் கண்டேன்!
பேதலித்துப் போனவளாய் தவித்து இருந்தேன்!

அந்நிகழ்வினை கவனித்தே சேர்ந்ததொரு கூட்டம்!
அவர்களுக்குள் எவருமே விலக்காது நோக்கும்
காட்சியானது கண்களில் நீரைக் கூட்டியது!
காரணம் அடிப்பவனின் நெஞ்சில் ஈரமில்லாது!


அக்காட்சி என்னுள்ளே எரிதழலைக் கொட்டியதே!
ஐயோ பாவமென  மனதும் எண்ணியதே!
இம்மியேனும் அவர்களை விலக்காதது கண்டே
இயலாத என்னிலையில் வெட்கிப் போனேன்!

நடத்துனரும், ஓட்டுனரும் பேருந்தில் ஏறினார்கள்!
நகர்ந்து வந்தே பயணிகளும் ஏறினார்கள்!
உள்ளே வந்தமர்ந்து பேசிக்கொண்டனர் சிலர்!
உயிரளித்தத் தகப்பனை அடித்தவன் மகன்தான்!

நாள்தோறும் இங்கு வந்து யாசித்து
நடுப்பகல் வரையில் கிடைத்ததைச் சேர்த்து
மதுவருந்திட சென்றிடும் அவனது தந்தையை
மகன் திருத்துகிறான் அடித்து அடித்தே!

யாருக்காக இங்கே நான் பேசமுடியும்?
பார்த்தேன்; சகித்தேனென்றா சொல்ல முடியும்?
வேரோடிப் போனது மதுவருந்தும் பழக்கம்!
வேரிழந்துப் போகிறது குடிமகனால் குடும்பம்!

**மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி. அலைபேசி: 6369 22 1462



# துளிப்பாக்கள்

ஆடைக்குள் ஒளிகிறதே
வெட்கப் படுகிறதோ?
சூடான பால்...

தண்ணீரில் மிதப்பதால்
மூழ்காமல் போகிறது
படகோட்டியின் வாழ்க்கை...

வெட்டுக்கிளிகளால் பயமில்லை
வீடுகளே நிறைந்திருக்கிறது
விளை நிலங்களில்...

போக்குவரத்து நெரிசல்
வாழ்வைத் தேடுகிறார்
பலூன் வியாபாரி...

தங்க மீன்கள்
உரசாமல் வாங்குகிறார்
அடகுக் கடைக்காரர்...

சுவற்றில் பால் கணக்கு
அழியாமல் இருக்கிறது
அம்மாவின் நினைவுகள்...

அவிழும் போதெல்லாம்
பாசம் வெளிவருகிறது
பாட்டியின் சுருக்குப் பையில்...

அப்பா அம்மா சண்டை
குருவிகள் கூட்டிற்கு திரும்புகிறது
குழந்தையின் பார்வை...

கூழாங்கல்லின் அடியில்
படபடக்கிறது
சுதந்திரதின கவிதை...

வெட்டப்பட்டது மரம்
புகார் அனுப்பப்படுகிறது
காகிதத்தில்...

– ஐ.தர்மசிங்,
நாகர்கோவில்,

## உன்னைத் தேடி.

அன்பே!
நீயும் நானும்
வெகுதொலைவாய்
நம் காதலைத் தொலைத்துவிட்டு
வாழ்கிறோம்

நான் உன்னைச் சேரும்
அந்த நாட்களைத்
தேடி அலைகிறேன்

காத்திரு மலரே
கனவில் வரும் நான்
ஓர் நாள் உன் முன்னால்
நிஜத்தில் வருவேன்.

– நாகதேவன்
கொடுக்குளாய், ஈழம்.

## ஆலயம்

பள்ளியெனும் பரந்திருக்கும்
உயர்ந்த கூடம்..
எனக்கு கிடைத்த
மிகப்பெரிய ஆலயம்
சொன்னது எப்போதும்
அனுபவ பாடம்..
சொன்ன வடிவந்தான்
கவிதையெனும் இலக்கணம்

–ப.வெங்கட்ரமணன்


## தன்னம்பிக்கை கொள்!



மண்ணை முட்டி வளர்வது
விதையின் தன்னம்பிக்கை!
விண்ணை நோக்கிப் பாய்வது
விண்கலத்தின் நம்பிக்கை!
ஒளிந்த உருவதத்தைக்
காட்டிக்கொடுப்பது
உளியின் நம்பிக்கை!
விழுந்தாலும் எழுந்து ஓடுவது
நீர்வீழ்ச்சியின் நம்பிக்கை!

மனிதா!
நீயும் தன்னம்பிக்கை கொள்!
நீ விதைப்பது எல்லாம்
விருட்சம் ஆக
இருளும் உனக்கு
வெளிச்சம் ஆக
விழிநீர் ஈரம்
விரைவில் கய
தோல்வியின் ரணம்
ரகசியமாய் ஆற
துயரத்தை வளராமல் தடுக்க
சிகரத்தில் சீக்கிரம் நடக்க
கிழக்கினை எழுப்ப
வெற்றியை உன் பக்கம் அழைக்க
தன்னம்பிக்கைகொள்!

– கவிஞர் சீ.பாஸ்கரன்,
கூடுவாஞ்சேரி.



# அறிவுவானை அளந்த செம்பறவை

# கோவை ஞானி!

கோவை ஞானி, தன்னைத் தானே செதுக்கிய சிற்பி. எப்போதும் வறண்டுவிடாத சிந்தனையால் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்பவர். தனக்கெனக் கொள்கைகளை வகுத்துக் கொண்டவர். நேர்மையைத் தனது இருத்தலின் முக்கியக் கோட்பாடாக ஏற்றவர். உலகில் நீ காண விரும்பும் மாற்றத்தை முதலில் உன்னில் உருவாக்கு என்ற காந்தியின் கருத்திற்கு உரு கொடுத்தவர்.


உடையிலும் பழக்கங்களிலும் உண்மையை விளம்புவதிலும் உறவாடுவதிலும் தனது தலைமைப் பண்பை வெளிப்படுத்திய வண்ணம் இருப்பவர். தன்னிடம் உருவான தலைமைப் பண்பை பலரிடமும் உருவாக்கியவர். யாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம் என்பதை வாழ்வாக்கியவர்;. பல உணர்வாளர்களையும் சமூக அக்கறையுடையவர்களையும் இவர் உருவாக்கிக் காட்டினார். வையத் தலைமை கொள் என்ற பாரதியின் கூற்றுக்கு இலக்கணமானார்.

அறச்சீற்றம், சமூகம் யாவருக்கும் பொது என்ற உணர்வு, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாமை, சொல்லொன்று செயலொன்று எனப் பிளவுண்ட மனநிலை இல்லாமை, மதம், அரசியல்,பொருளியல், பண்பாடு உள்ளிட்ட யாவற்றிலும் விடுதலையை முன்னெடுப்பது, மக்கள்மயப்படுத்துவது, பங்கேற்பு,ஆக்கரீதியிலான சமூக முன்னேற்ற சக்திகளை இனம் கண்டு வளர்த்தெடுப்பது, தன்னை முன்னிலைப்படுத்தி பிறரைப் புறந்தள்ளுகிற கேவலமான தன்முனைப்பு அரசியலில் ஈடுபடாமல் மற்றவர்களை முன்னேற்றுகிற பொதுநலநோக்குடன் செயலாற்றுவது உள்ளிட்ட எண்ணற்ற சமூகம் சார்ந்த விழுமியங்களையும் ஞானியிடம் நாம் ஒரு சேரப்பார்க்கிறோம்.

ஞானி தனியாள் மட்டுமல்ல. அவர் தமிழ் இனத்தின் அடையாளம். இயற்கையை நோக்கி, சூழல் பாதுகாப்பு நோக்கி,பசுமை நோக்கி, உழவரை நோக்கி, பச்சையாடை உடுத்திய ஊர்ப்புறங்கள் நோக்கி,

பழந்தமிழர் மரபுகள் நோக்கி துணிச்சலுடன் நடைபோடுகிற ஒருவரின் பண்பாட்டு அறிக்கை. அதிகாரத்தைச் சுவைத்துக் கொண்டே, அடுக்குமாடிகளையும் அகண்ட பேராசைகளையும் கைவிடாத, எளிய மனிதர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கிற பகல்வேட அரசியலுக்கு நேர் எதிரான எளிமை இவரிடம் குடிகொண்டிருந்தது.

எளிய வாழ்விற்குள் கனத்த சிந்தனைகள் முகிழ்க்க முடியும் என்பதை எடுத்துச் சொல்லும் வகையில் அவரின் ஒவ்வொரு



அசைவும் இருக்கிறது. ஞானி சமூக நலன் சார்ந்த அம்சங்களை நோக்கி அனைவரையும் ஈர்த்தார். சமுதாயமே தடம்புரண்டு கிடக்கும்போது நாம் குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டுவதைப் போன்றும் கிணற்றுத் தவளைகளைப் போன்றும் வாழ்வதில் அவருக்கு உடன்பாடில்லை. தடைகளைத் தகர்த்தெறிந்து புதியன படைக்கும் பேராற்றலோடும் பேராண்மையோடும் பெருங்கனவுகளோடும் அவர் களம்பல கண்டார். அறிவார்ந்த சமுதாயமாகத் தமிழர் சமுதாயம் உயர்வடையப் பாதை வகுத்தார்.

அறிவுத்தளத்தில் தேவையற்ற வீண் பேச்சுகளுக்கும் கருத்துகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். தனக்குச் சரியெனப்பட்டதை அச்சமின்றி எடுத்துரைக்கவும் பிறரை ஏற்றுக் கொள்ள வைக்கவும் அவரால் முடிந்தது. அறிவார்ந்த தேடலில் பலரையும் ஈடுபடுத்தினார். விடுதலைக்கான செயல்பாடாக வாசிப்பை கையிலெடுத்தார். புத்தகங்களோடு வாழ்வைப் புத்தாக்கம் செய்துகொள்கிற முயற்சியில் தன்னை நாளும் ஈடுபடுத்தினார். புத்தகவாசிப்பு இவரின் உயிர் மூச்சு. தன்னைச் சுற்றிலும் புத்தகங்கள் இங்குமங்கும் இடையறாமல் இயங்கும் வண்ணம் இவரின் அசைவுகள் அமைந்தன. இதைப் படியுங்கள், அதைப் படியுங்கள் என்று உற்சாகப்படுத்தியவாறே இருப்பார். பிறரைத் திருத்த வேண்டியிருந்தால் கடின சொற்களை உதிர்க்கமாட்டார். கடிதோச்சி மெல்ல எறிவார்.

தன்னைக் காண வருவோரிடம் தனிநபர் சார்ந்த விசாரிப்புகளை விரைவாக முடித்துக் கொண்டு பிறகு தான் படித்த நூல்களின் சிறப்புகளை எடுத்துரைப்பார். அவர்களின் வாசிப்புகள் குறித்துத் தவறாது கேட்பார். சிந்திப்போர் தனிவர்க்கம் அல்ல என்பதை நினைவூட்டினார். அவர்களை சமுதாய வட்டத்திற்குள் கொண்டு வந்தார். சிலர் தங்களைச் சுற்றி ஒளிவட்டம் போடுவதையும் ஆலவட்டம் ஆடுவதையும் எள்ளிநகையாடினார். பலரின் சிந்தனைகளை ஒருங்கிணைத்துப் புதிய செயல்பாடுகள் தோன்றச் செய்தார்.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலையை உயிர்மூச்செனக் கொண்டார். வள்ளுவனின் இளங்கோவின் கம்பனின் பாரதியின் பாரதிதாசனின் காரல்மார்க்சின் மாவோவின் கனவுகளைத் தனதாக்கிக்

கொண்டார். தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் சனநாயகப்படுத்தினார். மக்களுக்கான ஊழியம் நோக்கி கவனம் ஈர்த்தார். ஓய்வுநேர, சாய்வு நாற்காலிச் சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதனை இவன் முடிப்பான் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் என்பதற்கேற்ப பணிகளைத் தகுதியானவர்களோடு பகிர்ந்து கொண்டார். சிறப்புற செய்து முடிப்போரை எப்போதும் பாராட்டினார். காய்தல் உவத்தல் இன்றி திறந்த மனதோடும் பிறரை உற்சாகப்படுத்தும் நோக்கோடும் பாராட்டினார். செயல் அதுவொன்றே சிறந்த சொல் என்ற ஒப்பற்ற வரியை வாழ்வியல் ஆக்கினார்.

மாற்றத்திற்கான செயல்பாடுகளில் கண்ணும்கருத்துமாக இருந்தார். எவரும் எளிதில் அணுகக்கூடியவராக விளங்கினார். எத்தனை முறை அவரைச் சந்தித்தாலும் அந்தச் சந்திப்பை மறக்கமுடியாததாக மாற்றினார்.

ஞானி பாசாங்கு இல்லாத பண்பாளர். நகைச்சுவை என்ற குணத்தை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பவர். வருவோர் யாவருக்கும் அதை வாரி வழங்குபவர். இவருக்கு அருகில் வருவோருக்கு இவரின் உற்சாகம் கண்டிப்பாகத் தொற்றிக் கொள்ளும். தனது தேவைகளைச் சுருக்கிக் கொண்டவர். அவரின் எளிமைக் கோலம் எளியோரையும் அவர்களுக்குத் தேவையான புரட்சியையும் எப்போதும் நினைவூட்டுவதாக அமைகிறது. ஞானியின் புதிய தேடல்களும் புதுமைச் சிந்தனைகளும் புதிய பாதைகளும் நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் பலருக்கும் தூண்டுகோலாக இருக்கும். மாற்றங்களை நோக்கிய பயணத்தின் குறியீடாகவும் அடையாளமாகவும் இவரின் குரல் தமிழ்கூறு நல்லுலகில் ஒங்கி ஒலித்துக்கொண்டுதான் இருக்கும்.


கடந்த 2019 ஜூலை 22 ஆம் தேதி காலை 10.59 ற்கு ஞானி பூவுலகைப் படைப்புலகமாக்குகிற தனது சிந்தனைப் பயணத்தை நிறுத்திக் கொண்டார். இறுதிவரை நூல்களை நேசித்தவர் நூல்களை அணைத்தவாறே நம்மிடமிருந்து விடைபெற்றார். அவர் மறைந்தாலும் அவரின் தனித்துமிக்க தமிழ்ப் பயணம் தொய்வின்றித் தொடரும்.

தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை!

வரலாறாகித் தமிழின் வான்முகட்டை எட்டுகிறார்!



அருள்திரு. முனைவர். சோ. பிலிப் சுதாகர்
திண்டுக்கல். பேசி: 9443134209



## காதலற்ற கோடைக் காலம்

விழுந்த மலர்கள் சற்றுநேரத்தில்
கருகிப்போக
சுருண்ட இலைகள் சுத்தமாய்
வாடிப்போக
வறண்ட நாக்குகளைச்
சுழற்றிச்சுழற்றி
ஏக்கத்தோடு பார்க்கும் நாய்களும்
நடக்கும் அவ்வீதியிலுள்ள குழாயில்
கடைசிச் சொட்டு எப்போது
உதிருமெனக் காத்திருக்கும்
அணிலின் பார்வையும்
குருவிகளின் பசியும்
ஒருசேரச் சொல்கிறது
வெம்மையின் தாக்கத்தினை..

அக்கணப்பொழுதில் யாரும்
நடக்காது வெறுமையின்
உச்சம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது
இருந்தும் உன்னோட காதலில்
யாவும் மறந்து இருக்கிறேன்
நீயோ அனல்கொள்ளும்
இவ்வேளைதான்
சரியான பொழுதென்று
உயிர்பறிக்கும் சொல்லொன்றால்
நமது காதலின் கடைசி நிமிடத்தை
பதிவு செய்கிறாய்....

மீண்டும் மீண்டும்
யோசிக்கத் தோன்றுகிறது.
எப்படி உனக்கு மட்டும்
இப்படியான யோசனை
சரியான நேரத்தில்
வந்துவிடுகிறதென..

–கவித்தென்றல் சௌ.நாகநாதன்
சின்ன இரெட்டையூரணி

## தமிழில் இல்லை கலப்படம்

தமிழில் இல்லை
கலப்படம் –தமிழா!
நீ உணர்ந்தால் தமிழ்
உருப்படும்.

தாய்ப்பால் குடி
தாய்மொழி படி

தமிழை மறந்து
சாகாதே!
செந்தமிழே உயிராய்
மறவாதே

கசடற எல்லா மொழியையும்
கல்–நற்றமிழில்
கற்பவை கற்று வெல்.

இனியும் பணிந்து,
குனிந்து போகாதே!–நீ

துணிந்தால் போதும்
இன்பம் சாகாதே!

தொட்டிச் செடியாய்
ஆகாதே!-உன்
தோட்டம் தன்னை
இழக்காதே!
தாய்மொழி சிந்தனை
ஊற்று-நாம்
உயிர்வாழும் காற்று



எதையும் ஆய்ந்து பார்க்க
பழகு-புதைத்தாலும்
மண்பிளந்து முளைக்கும்
விதையும் அழகு

என்றும் குனிவதில்லை
நெருப்பு-அதுபோல்
வாழ்வது உன்றன்
சிறப்பு

தமிழ்வழிக் கல்வி
படி-அதுவே,
உன்னை உயர்த்தும்
படி.

— புதுவை தமிழ்நெஞ்சன்

## மனசு மட்டும் தான்...

மனப்பரணில் இருந்து
நினைவுகளை
இறக்கி வைத்துத்
தூசு தட்டுகிறேன்

பசுஞ்சாணம் கரைத்து
மெழுகிய அடுப்பின் மீது
வெள்ளைத் தாமரை
பளிச்சென்று சிரிக்கிறது
அம்மா போட்ட மாக்கோலம்

அடுப்புச் சாம்பல் வழித்து
நுனிப் பல் தேய்த்துக்
கடுங்காப்பியில்
ஊறவச்ச வரிக்கியோடு
நிரம்பி விடும்
வயிறும் மனசும்

பாத்திரத்தில் படாமல்
புழக்கடை வழியா
நீச்ச தண்ணி
வாங்கிப்போறவ
மகளோட தான்
பள்ளிக்கூடத்துல
தோள் மேல் கை போட்டு
அவ
காக்காக்கடி கல்ல முட்டாய்
என் வாயில கரையும்

செம்மண் கூடு
மொட்டக் காலுக்கு
தெரியாதிருக்க
ஊடு பயிருருவி
செய்யாத வீட்டுப் பாடத்துக்காய்

காதைப் பிடித்துத் திருகிய
வாத்தியாரையும் சேர்த்து
மென்னு மென்னு
துப்பிக்கிட்டே வருவோம்.

நுங்குவண்டியிலும்
சைக்கிள் டயரிலும்
உருட்டி விளையாண்ட
பால்ய காலத்தைப்
பாட்டி சுட்ட வடையோடு
எந்தக் காகம் கொத்திக்
கொண்டு போனது?

நகரத்துல வாக்கப்பட்டு
ஒடம்பு மட்டும் தான்
இங்கன கெடக்கு
மனசும் நெனப்பும்
வீட்டு வாசல்ல இருக்கிற
மூங்கிப் படல்லயே
சிக்கிக்கெடக்கு

–அமுதா தமிழ்நாடன்



## பூஜ்யக் கனவுகள்

பனிக்குடம் உடலின் கவசக்கூடு
மெல்லத் தளும்பித் தளும்பி அலைகிறது
பூவின் மகரந்தப் பையாய் உடைபட
உயிரை முகிழ்த்துகிறது.

நெடுஞ்சாலையில் பேருந்து விபத்தானது
ஆட்கள் ஓடி வந்தார்கள்
உடல்கள் தவிர எல்லாம் களவு போனது

சொல் விஷம் பருகினாள்
நாக்கில் பாம்புகள் துள்ளின
வானத்தைப் பிடிக்க வலை வீசினேன்
சில மேகங்கள் மட்டும் சிக்கின
கையில் எடுக்கையில் பறந்து போய்விட்டன.
போனது வாழ்க்கை

காட்டுக்கிழங்கைத் தேடி அலைகிறான்
புளிச்சிப் பழங்களை
வேட்டையாடுகின்றன மணிப்புறாக்கள்
பசி பிடுங்கித் தின்ன
வேடிக்கை பார்க்கிறான்.

– வசந்ததீபன்

## ஞாபகம்



மாலை வெயில்
தோகை விரித்தாடுது
அழகு மயில்.

தொலைந்த உறவு
வந்து போகும்
அவள் நினைவு

மரக்கிளை,
அசைந்ததும்,
சிறுமழை.

பௌர்ணமி நிலவு,
உன்னோடு நான்,
நல்ல கனவு.

பழைய தழும்புகள்,
ஞாபகம் வருகின்றன,
இளமைக் குறும்புகள்.

–அய்ஷத் அப்ஸத்,
பாலமுனை, இலங்கை.

## புனிதம்

மரணத்தை வெல்ல ஓர்மருந்து
மகிழ்ச்சிதான் அன்றன்றும் அருந்து
தருணத்தில் வருகின்ற எதையும்
தவிர்த்திட நம்பிகை உதவும்
ஒருமுறை மானிடப் பிறப்பு
ஒழுக்கமாய் வாழ்வதே சிறப்பு
வருந்துந் துன்பம் நீக்கிடத்தானே
வல்லமை என்பது உறுப்பு!

மனதுக்குள் தேக்கிடும் கவலை
மறைமுக விஷமுள்ள குவளை
தினந்தினம் செய்கின்ற பயிற்சி
தேகத்தை வளர்த்திடும் முயற்சி
குணநலன் அமைந்திட வணங்கு
குருவழி நடந்திட இணங்கு
தனமொரு தேவைதான் நித்தம்
தனக்கென்று குவிப்பதே குற்றம்!

ஈகையில் தெய்வத்தைக் கூடு
இரக்கமே அவன்வாழும் வீடு
சோகத்தை தள்ளியே மூடு
சுயமென்று வாழ்வதே கேடு
ஏகத்தும் நமக்கென படைத்தான்
எறும்புக்கும் இதுஒரு விடைத்தான்
ஆகநல் வாழ்க்கையே மனிதம்
அகலாது வாழ்வதே புனிதம்!

–பொன்மணிதாசன்



சிறு சிறுகதை

# அகல் விளக்கு..!



தாழை இரா.உதயநேசன்

மூன்று வருடங்களுக்குப் பிறகு. அமெரிக்காவிலிருந்து சொந்த ஊருக்கு விடுமுறையில் வருகிறான் சேகர்,

ஹெச்1-பி, விசாவில், தகவல் தொழில்நுட்பத் துறை வேலைக்குச் சென்றவன், வேலைப் பளுவின் நிமித்தம் இப்போதுதான் ஊருக்கு வருகிறான்.

சங்கரன், பரிமளா தம்பதிக்கு ஒரே மகன் சேகர், 26 வயதாகிறது. வீட்டிலிருக்கும் தாத்தா, பாட்டி அவனைப் பார்க்கவேண்டும் என்று தொந்தரவு செய்தார்கள். தாந்தா, பாட்டியுடன் நெருக்கமாயிருந்தான் சேகர்.

இப்போது சேகர் ஊருக்கு வருவதற்கு முக்கிய காரணம் உண்டு. முழுக்குடும்பமும், அவனுக்கு திருமணம் செய்துவிட வேண்டுமென்று முடிவுசெய்துள்ளனர். சங்கரனின் தாயார், சேகர் ஒரு வெள்ளைக்காரியைக் கொண்டுவந்துவிடப் போகிறான் என்று ஒரே கவலையில் இருந்தார், சங்கரன்தான் “ நம்ம பையன் அப்படி செய்யமாட்டான்” என்று நம்பிக்கையூட்டினர்.

சேகரின் தாய் மாமா மகள், அமெரிக்காவில் வேலை செய்துகொண்டிருந்தபோது, தன்னுடன் வேலை செய்த ஒருவரை திருமணம்



செய்துகொண்டாள். அதிலிருந்து சேகரின் தாயார் பரிமளாவிற்கு மகனைப் பற்றி ஒருவித கலக்கம் தொற்றிக்கொண்டது. எப்படியோ மகனிடம் பேசி, தாத்தா பாட்டியைக் காரணம் காட்டி, அவனை ஊருக்கு வரவழைத்ததில் பரிமளாவிற்கு திருப்தி.

சேகர் ஊருக்கு வந்ததும், சங்கரனின் தூரத்து உறவுப்பெண் அகல்யாவை அவனுக்கு திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று முழுக்குடும்பமும் நினைத்திருந்தார்கள். பெண் வீட்டாரிடமும் சொல்லி வைத்திருந்தனர்.

சேகர் நேரில் வத்ததும், மற்றதெல்லாம் முடிவு செய்துகொள்ளலாமென்று இரு வீட்டாரும் காத்திருந்தார்கள். அகல்யாவும், சேகரின் புகைப்படம் பார்த்து, மனதிலே ஐக்கியமாகியிருந்தாள்.

சென்னை. விமான நிலையத்தில் வழக்கமான நடைமுறைகளை முடித்துக்கொண்டு, வீட்டிற்கு வந்து சேர்ந்தான் சேகர்.



மறுநாள் கார்த்திகை தீபம். காலையிலேயே தயாராகி குடும்பத்தோடு பெண்பார்க்கச் சென்றான் சேகர். காரிலிருந்து இறங்கி, பெண் வீட்டிற்குள் சென்றவனுக்கு ஒரே ஆச்சரியம். அங்கே. அகல்யா அகல்விளக்கு ஏற்றிக்கொண்டிருந்தாள்.

நலம் விசாரிப்பு முடித்து, திருமணத் தேதியும் குறித்துவிட்டு, பெரியவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். படித்தப் பெண்ணா தனக்கு வாழ்க்கைத் துணையாக வருவதை எண்ணி பரவசமானான் சேகர்.

அகல் விளக்கின் ஒளியில், அகல்யாவின் கண்கள் மின்னிக்கொண்டிருந்தன.

அகல்யாவும் சேகரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். ஒருவருக்கொருவர் நன்றாகத் தெரியும். கண்களால் பேசியதுண்டு. ஆனால், காதலிக்கவில்லை. இப்போது, வாழ்வின் அகல் விளக்காக அந்த அகல்யாவே வருகிறாள்.

தமிழில் நவீன எழுத்தை கையாண்ட எழுத்தாளர் கோபிகிருஷ்ணன் ஆவார். தனித்தன்மை மிக்க எழுத்தாளர். அனுபவத்தைத் தவிர கற்பனையாக எழுதமாட்டேன் என்று இருந்தவர். மேலும் தன் மன உலக அனுபவங்களை அப்பட்டமாக எழுத்தாக்கியவர் அவர். சில ஆண்டுகளுக்கு முன் கோபி மரணமடைந்துவிட்டார். ஆனாலும் அவரது எழுத்துக்கள் சாகா வரம் பெற்றவை.

## உரிமை

**– கோபிகிருஷ்ணன்**

மாநிலக் கல்லூரியில் இளங்கலை உளவியல் பிரிவில் என் முதலாம் ஆண்டு ஆரம்பித்தது. நாங்கள் பத்து மாணவர்கள் ஒன்பது மாணவிகள். மதுரையில் என் பாட்டியின் கண்டிப்பான வளர்ப்பும், வீட்டிலுள்ள கோவிலில் தினப் பூஜையும், அவர் நடத்திய பஜனை மண்டபத்திற்கு வரும் பெண்களை அக்கா, தங்கை, அத்தை, மாமி, பாட்டி என்று அழைக்க வேண்டி வந்த திணிக்கப்பட்ட நிர்ப்பந்தமும், பாலுணர்வு புரிந்தும் புரியாத நிலையில் ஒரு அழகிய இளம் பெண்ணைப் பார்த்து ஒரு ஆணுக்கு ஏற்படும் இயற்கையான அழகுணர்வே பஞ்சமகா பாதகங்களுள் ஒன்று என்ற குற்ற உணர்வை ஏற்படுத்திய மனநிலையும், என்னுள் சற்று தாராளமாகவே சங்கோஜ பாவத்தை வளர்த்திருந்தன.

கல்லூரிக்கு வந்த பிறகும் சகமாணவிகளுடன் சாதாரண விஷயங்களைப் பற்றி ஓரிரு வாக்கியங்கள் பேசுவதற்குள் உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. முகம் வியர்த்துக் கொட்டியது.

முதலில் என்னுடன் சகஜமாகப் பேசியது ரோஸி ஜான் தான். என்னமோ என்னுடன் நெடுங்காலம் பழகியதுபோல் எடுத்த எடுப்பிலேயே அவள் என்னுடன் பேசிய முதல் வாக்கியங்கள் ‘என்ன ராஜ், இன்னெக்கி அட்டகாசமா சட்டை போட்டிருக்கே? யாரையாச்சும் காதலிக்கிறாயா? யார் அந்த அதிர்ஷ்டசாலிப் பெண் ?’

எனக்கு உண்மையிலேயே தூக்கி வாரிப் போட்டது. முகத்தில் வழக்கமாக வழியும் வியர்வையுடன் சற்று அசடும் சேர்ந்து வழிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு வரவழைத்துக் கொண்ட, புன்சிரிப்பு என்று நான் நம்பிய ஒன்றை வெளிப்படுத்தினேன். அவளும் சிரித்துக்கொண்டே சென்றுவிட்டாள். எனக்கு அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லை. புது மாதிரியான சட்டை நான் போட்டால் ரோஸிக்கு ஏன் அது அட்டகாசமாகப் படவேண்டும்? அட்டகாசமான சட்டை போடவேண்டுமென்றால் ஒரு காதலி ஒருவனுக்கு இருக்கவேண்டுமா? எனக்கு வாழ்க்கைப்படப் போகிறவள் அதிர்ஷ்டசாலியாகத்தான் இருக்கவேண்டும் என்று ரோஸி ஏன் நினைத்தாள்? அன்று இரவு தூங்க ஒரு diazepem (மாத்திரை) தேவைப்பட்டது.



ரோஸி பார்ப்பதற்கு அழகாகவே இருந்தாள். அவளிடம் எனக்கு ரொம்பவும் பிடித்த ஒன்று அவள் மூக்கின் நுனி சற்று தூக்கலாக இருந்தது. ஒரு ரோமானிய அம்சம்.

ஓராண்டு கழித்து மறு ஆண்டு வந்து அதுவும் கழித்து மூன்றாம் ஆண்டு இறுதியில் இருந்தோம். ரோஸியும் நானும் இந்நேரம் மிகவும் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தோம். இப்பொழுதெல்லாம் எனக்கு வியர்த்துக் கொட்டுவதில்லை. மூன்று கலை நிகழ்ச்சிகளுக்கும், அடிக்கடி கல்லூரிச் சிற்றுண்டிச் சாலைக்கும் தோராயமாக ஒரு இருபது ஆங்கிலப் படங்களுக்கும் சேர்ந்தே சென்றாகி விட்டிருந்தோம். என்னை அவளுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டிருந்தது. என்னைப்போல் ஒரு இனிய நண்பன் கிடைக்க அவள் கொடுத்துவைத்தவள். அவள் வாழ்க்கையில் நான் கலந்து விட்டால் வேறு ஏதும் தேவையில்லை. நான் புளகாங்கித்துக் கொண்டிருந்தேன். இரவில் அவள் பளிச்சென்ற புன்னகை பூக்கும் முகமும், முகத்தில் குறிப்பாக அவளது அழகிய மூக்கும் ஏன் கண் முன் தோன்றிக் கொண்டிருந்தன. எனக்கு ஏதேதோ கற்பனைகள்.

சாதாரணமாக உளவியல் படிப்பவர்கள் ஒரு உறவை.உறவின் அடிப்படையை, உணர்வுகளை சித்திரவதை செய்து காரண அலசலில் மூழ்கி மூர்க்கத்தனமான அர்த்தங்களை அவற்றிற்கு ஏற்படுத்தி, உறவிலுள்ள இனிமையை காரண ரீதியில் காயப்படுத்துவார்கள். நல்லவேளை, எனக்கு எங்கள் உறவை அப்படியெல்லாம் செய்யத் தோன்றவில்லை. எங்கள் உறவில் ஒரு இனிய கவிதை இழைந்தோடிக் கொண்டிருப்பதாகவே பட்டது.

எனக்குள் ஒரு குறை. அவளை இதுவரை தொட்டதில்லை. என்னுள்ளிருந்த பாட்டி என்னை விட்டு ஒழியவில்லை. நான் என்ன செய்யட்டும்?

என சகமாணவர்கள் ரோஸியையும் என்னையும் சேர்த்து கன்னாபின்னா என்று கழிப்பறை சுவர்களில் எழுதியோ, ஆட்டீன் படத்தையும் அம்புக் குறியையும் வரைந்தோ, எங்கள் உறவில்

அவர்களுக்குள்ள அக்கறையைப் பிரகடனப் படுத்திக் கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் உளவியல் மாணவர்கள் கண்ணியமானவர்களே. மூன்று ஆண்டுகள் ஒரு உறவு சுமுகமாக இருந்ததற்கு ஆண்டவனுக்கு நன்றி சொல்லத் தோன்றியதோ இல்லையோ, என வகுப்புத் தோழர்களுக்கு நிச்சயமாக மானசீகமாக நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

இறுதி ஆண்டு பல்கலைக் கழகத் தேர்வுக்கு இன்னும் இரு தினங்களே இருந்தன. மாலை, என் அறையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் உளவியலைப் பற்றி நான் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தேன். விடுதியின் பையன், என்னைத் தேடி ஒரு இளம் பெண் வந்திருப்பதாக அறிவித்துவிட்டுப் போனான். எனக்கு குழப்பமாக இருந்தது. மனநலம் குன்றியவர்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தது ஒரு காரணமாக இருக்கலாம். மேலும், எந்தப் பெண்ணும் என விடுதி தேடி வந்ததுமில்லை. உடனே சட்டை பாண்டை மாட்டிக்கொண்டு தலையை ஒருவாறு சரிசெய்து கொண்டு அவசரமாக வாசலின் அருகே உள்ள பார்வையாளர்கள் அறைக்கு விரைந்தேன்.

எனக்கு ஒரே ஆச்சரியம். அங்கு ரோஸி எனக்காகக் காத்துக் கொண்டிருந்தால். அவளுக்கு படித்துப் படித்து அலுத்து விட்டதாம். ஒரு மாறுதலுக்காக கடற்கரைக்குச் செல்லவேண்டும் என்று தோன்றியதாம். நான் கூட இருந்தால் சந்தோஷமாக இருக்குமாம். அறைக்கு சென்று கதவைப் பூட்டிவிட்டு அவளுடன் கிளம்பினேன். வழி நெடுக இனிமையான அன்னியோன்னியங்களை பேச்சால் பகிர்ந்துகொண்டு மணற்பரப்பில் வெகு தூரத்தைக் கடந்து அலைகள் மணலைத் தொடும் இடத்திற்கு வந்துவிட்டோம். எனக்கு மிகவும் இன்பமான மாலைப் பொழுது. இன்னும் ஓரிரு மாதங்களுள் நாங்கள் திருமணம் செய்து கொள்ளப்போகிறோம். நாங்கள் ஏற்க்கனவே செய்து கொண்ட முடிவுதான். அந்த எண்ணத்தில் 'நான்' என்று நம்பிக்கொண்டிருக்கும் ஒன்றுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு. ஏதேதோ இனிய எண்ணங்கள்.

ரோஸிக்கு என்ன தோன்றியது என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. நாங்கள் அப்பொழுது உட்கார்ந்திருந்தோம். 'ராஜ். கொஞ்சம் என செருப்பைப் பார்த்துக்கோயேன்.நான் அலையிலே நின்னுட்டு வர்ரேன்' என்று இனிமையாகச் சொல்லி, செருப்பை சிரத்தையுடன் அவசரப்படாமல் கழற்றி என முன்னாள் விட்டுவிட்டு அலைகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அவள் பின்னழகையோ நடை எழிலையோ ரசிக்க எனக்கு அப்பொழுது நிச்சயம் தோன்றவில்லை. எனக்கு ஒன்று உடனே நினைவுக்குவந்தது.நான்மதுரையில்அடிக்கடி சென்று கொண்டிருந்த கோவில் வாசலில் அழுக்குச் சைட்டையும் கிழிந்த அரைக்கால் சட்டையும் போட்டுக்கொண்டிருந்த ஒரு பத்து வயதுச் சிறுவன் கோவிலுக்கு வரும் பக்தர்களிடம் பத்து பைசா வாங்கிக்கொண்டு அவர்களது காலணிகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தான்.

மாநிலக் கல்லூரியை விட்டு நான் வெளியேறி 20 ஆண்டுகள் ஆகின்றன. என் மனைவியின் பெயர் ரோஸி இல்லை.



# மனதில் அலையும் வெயில்

எவர் கை இடும்?
என் சவக்குழியில்
ஒரு பிடிச் சொல்லையோ
ஒரு பிடி மௌனத்தையோ
நான் உயிர்த்தெழ.

நிழல் தேடி
மனதுக்குள் நுழைந்தேன்
அங்கும் வெயில்தான்.

பாறை பிடித்தமர்ந்த
கழுகின் கால்களில்
அதன் நிழல்.

யாரும் கையசைக்கவில்லை
தினமும் விடைபெறும்
அந்தி.

யாரும் கவனிக்கவில்லை
வியர்த்துக் கொண்டிருக்கின்றன
கவரி வீசுபவனின் கைகள்.

மெல்லப் பேச்சுக்கொடுக்கின்றன
வெட்டிய மரத்தில்
துளிர்க்கும் இலைகள்.

மெல்லத் திறந்து
தன்னை வாசித்துக் கொண்டிருந்தது
புத்தகம்.

நானும் கண்களை மூடி
வாசிக்கத் தொடங்கிவிட்டேன்
என்னை.

நிசப்தமாக இல்லை
புத்தனின் மௌனம்.

கேள்வியாகவே இருக்கிறது
எல்லா பதில்களும்.

கண்சிமிட்டாமல்
பார்த்துக் கொண்டிருக்கிறது
சிறு புல்.

நொடியின்
ஒருமுனை பிடித்து கீழிறங்குகிறது
மறு நொடி.

மறுமுனை பிடித்து
ஜனிக்கிறது
இன்னொரு நொடி.
காலத்திற்கும் உண்டு
ஜனனமும் மரணமும்.

எப்போதும்
தரிசனம் கிடைத்ததே இல்லை
கடைசி இலை உதிர்வு.

இந்த வாழ்க்கை
சிலருக்கு மட்டும் தான்
கவிதையாக.

எல்லாப் பக்கங்களிலும்
தேடி விட்டேன்
வைத்த
மயிலிறகை காணவில்லை.



- காவனூர்.சீனிவாசன்

# வானமே எல்லை

பகலும் இதற்கு இங்கே விதிவிலக்கில்லை!
படுக்காத போதும் வராமல் இருக்கவில்லை!
ஆணுக்கும் பெண்ணுக்கும் இதனால் தொல்லையில்லை!
ஆதாம் ஏவாளில் ஆரம்பித்தது நிற்கவில்லை!
பரந்தபூமியில் வானமே எல்லை!
பரிசாக இன்பமொன்றே வருவதென்றால் மிகையில்லை!

– முனைவர் கவிக்கோ டாக்டர் ஜெயக்குமார் பலராமன்



# இலக்கியப் பெட்டகம் இராம.குருநாதன்





முனைவர் இராம.குருநாதன், பச்சையப்பன் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பேரறிஞர். பல்வேறு இலக்கிய அமைப்புகளில் பொறுப்பு வகிப்பவர். "குடந்தை குருஜி" என்ற பெயரில் அந்தாதிகளை அள்ளித் தந்தவர். "பொன்னிநாடன்" என்ற புனைபெயரிலும் வலம்வந்தார். பின்னர் அவரது சிந்தனைகள் மாற, அவரது தமிழ் புதுவேகமெடுத்துப் பாயத்தொடங்கியது.

படிக்கட்டும் தமிழ்பாடும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் தொண்டாற்றிப் பல கவிஞர்களையும் பாடலாசிரியர்களையும் உருவாக்கியவர். அவரிடம் தமிழ்பயின்ற வைரமுத்து, நா.முத்துக்குமார், அண்ணாமலை உள்ளிட்ட பலரும் பாடலாசிரியர்களாக மாறியது, வியப்பிற்குரிய ஒன்றாகும். அவருடைய கவிதைகளுக்குள் ஒரு சிறு பயணம் போகிற போது எத்தனை எத்தனை மின்னல்கள்..

"தாய்சுமந்த பாட்டெல்லாம் தாலாட் டாகும்
தமிழ்சுமந்த பாட்டெல்லாம் பக்தி யாகும்
வாய்சுமந்த பண்ணெல்லாம் ராக மாகும்
வளம்சுரந்த நற்சொல்லே வாய்மை யாகும்
நீர்சுமந்த மேகங்கள் மழையே யாகும்

நிலம்சுமந்த வயலெல்லாம் பயிரே யாகும்
நேர்சுமந்த வாழ்வெல்லாம் பண்பா டாகும்
நினைசுமந்து வாழ்கின்றேன் தமிழே வாழி! (1966)

என்று தமிழுணர்வு குன்றாமல் வாழும் பேராசிரியர் இராம. குருநாதன். குடந்தையில் பிறந்தவர்.

காதல் கவிதையில் கவிஞரின் கைவண்ணம் மிக இயல்பாக, நயத்தக்க நாகரிகத்தோடு அமைந்துள்ளது என்பதை

"தாமரை மொட்டு என்றான் — மெல்லத்
தலையை நான் தாழ்த்தியதால்
பூமலர்க் கூட்டமென்றான் — உடல்
புதுமலர்க் கூடையென்றான்.
கைகளின் வளையல்ஒலி
களிவண்டுப் பாட்டென்றான் — காலின்
சிலம்பொலியை — தான்
கேட்ட கவிதையென்றான்"

– என்ற கவிதையில் கண்டு கொள்ள முடியும். சமூக அக்கறையோடு இயங்கிவரும் கவிஞருக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கிற குரல் எது என்பதை நாம் அறிந்து கொள்வதற்காக

"ஏழை கட்டிய சிறுவீடு
இந்தியா என்பது இதன்பேரு
ஏழை வசிக்கும் இவ்வீட்டில்
ஏமாற் றம்எம் கையிருப்பு.
வீதியில் அரசியல் சுவரொட்டி
வெளிச்சம் காட்டும் விளம்பரங்கள்
சாதனை அவர்கள் சரித்திரத்தில்
சாதி சனங்கள் தரித்திரத்தில்"

என்கிறார். என்ன நடந்து கொண்டிருக்கிறது நாட்டில் என்பதை மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் "சொல்மாற்றம்" என்கிற கவிதையில்

"வாக்குறுதி பெற்று வந்தவர்கள்
நாக்குழறி
இப்படிச் சொன்னார்கள்

"இருட்டே இல்லாத ஆட்சியில்
உங்கள் வாழ்க்கை
ஒளிமயம்" என்று.

அடித்துச் சொல்ல வந்தவர்கள்
இடம் மாறிப்போய்


"எங்கள் வாழ்க்கை ஒளிமயம்"
என்றார்கள். உண்மைதானே!

"மௌனத்திற்குப் பிறகுதான்
தெரிந்தது வாழ்க்கை
பேரிரைச்சலாக இருந்தது என்று"–

என்கிறார். அவர் கவிதைகளின் உள்ளிருக்கும் மொழியின் சூட்சமத்தை உணர்ந்து கொண்டால் உண்மை ஒளி கிட்டாமல் இருக்குமா?

**சென்னிமலை தண்டபாணி**

# பரிதவிக்கும் இறைவன்



பூக்கள் உதிர்த்த
வேதங்களிலிருந்து
முளைக்கின்றன
கோரப் பற்களும்
இரக்கமற்ற நகங்களும்

மனிதக் காடுகளிலிருந்து
வேட்டைக்குப் புறப்படுகின்றன
மிருகங்கள்

புராதனச் சவப் பெட்டிகளின்
மூடியைத் திறந்து கொண்டு
தாகத்தோடு எழுகின்றன
டிரகூலாக்கள்

கரை புரண்டோடும்
ரத்த வெள்ளத்தில்
மூழ்கிவிட்டன
ஆலயங்களும்
மசூதிகளும்

சிதைத் தீயால்
நடக்கிறது தீபாராதனை

போர்க்களத்தில் சிக்கிக்கொண்ட
பட்டாம் பூச்சியாய்
அமர்வதற்கு இடமின்றி
அலைகிறான் இறைவன்

– கவிக்கோ அப்துல்ரகுமான்



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:
www.americamutamiluniversity.org